*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII (1)**
**December - 2022**

## சங்க இலக்கியத்தில் இசைக் கலைஞர்கள்- ஓர் ஆய்வு

நளினாதேவி, ஜெ.
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: nalinadevisankar@gmail.com**

### ஆய்வுச் சுருக்கம்

கலைஞர்கள் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும், மகிழ்விப்பதில் சிறந்து விளங்குபவர்கள். கலை ஆர்வத்தாலும், தன்னுடைய திறமையாலும், பிறரை மகிழ்விப்பதற்காக வாழ்பவர்கள் கலைஞர்கள். அத்தகைய கலைஞர்களைப் பற்றி ஆராய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்: அகவலன், அகவர், இயவர், கண்ணுளர், கலப்பையர், கிணைவன்.**

### முன்னுரை

சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் கலைஞர்கள் பண்பட்ட மனத்தினர். தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், துன்பங்கள் ஆகியவற்றை எல்லாம் மறந்து கலைகளில் மூழ்கிப் பிறருக்காக வாழும் கலைஞர்களே உண்மையான கலைஞர்கள். அரசனையோ வள்ளலையோ கண்டு பரிசு பெறறுத் திரும்பும் கலைஞர்கள் தன் முன் எதிர்ப்படும் சக கலைஞனைக் கண்டு பெற்ற பரிசினைச் சுட்டிக் காட்டி அவர்களை அவ்வள்ளலிடம் அனுப்பி வைத்தனர். இதனையே,

> **"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற**
> **பெருவளம் பெறாஅறர்க்கு அறிவுறீஇச்**
> **சென்று பயன் எதிர்ச் சொன்ன பக்கமும்"[1]**

என்று தொல்காப்பியம் சுட்டிக் காட்டுகிறது.

### இசைக்கலைஞர்கள்

சங்க இலக்கியங்கள் தொழில்முறைக் கலைஞர் என்ற அடிப்படையில் அகவலன், அகவர், கோடியர், இயவர், கண்ணுளர், கலப்பையர், கிணைவன், துடியன், வயிரியர், சூதர், பொருநர், விறலியென பாண் மரபின் மக்களைச் சுட்டுகின்றன. இத்தகைய இசைக் கலைஞர்கள்

இரப்பவர்களாகவும் அரசர்களோடு நெருங்கிப் பழகுபவர்களாகவும் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்பவர்களாகவும் இருந்துள்ளனர்.

**அகவலன்**

அகவுதல் போன்ற அகவலோசையில் பாடுவதில் வல்ல பாணர்கள் "அகவலன்" என்று தமிழிசைக் கலைக்களஞ்சியம் சுட்டுகிறது. போர்க்களத்தை வாழ்த்திப் பாடும் மரபு உடையவர்கள் "அகவலன்" என்று அழைக்கப்படுகின்றனர். போர்க்கள நிகழ்வுகளை நேரில் கண்டு அதனை மக்களிடம் மத்தியில் கொண்டு செல்லும் இயல்புடையவர்கள். களத்தில் நிகழ்ந்த மறமேம்பாட்டினை ஊர்மன்றத்திலும், தெருக்களின் இரண்டு பக்கத்தும் போய் கூறுபவர்கள் அகவலன். தலைவன் போரிட்டு வென்ற போர்க்களத்தை வாழ்த்திப் பாடும் பாணனைப் பதிற்றுப்பத்து "அகவலன்" என்கிறது.

இதனை,

> **"மன்றம் படர்ந்து மறுகு சிறைப்புக்கு**
> **கண்டி நுண்கோல் கொண்டு களம்**
> **வாழ்த்தும்**
> **அகலவன் பெறுக"[2]**
> **பதிற்றுப்பத்து (26 – 28)**

என்ற அடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**அகவர்**

அரச மரபினரின் வீரம், புகழ், ஆட்சி, ஆண்மை முதலியவற்றைப் பாடும் கலைஞர்கள் "அகவர்" எனப்பட்டனர். மன்னர்களின் துயில் பாடுபவர்களாகத் திகழ்பவர்கள். முல்லைத்திணை உழவராகவும் "அகவர்கள்" விளங்குகின்றனர். நிலமக்கள் தத்தமக்குரிய பண்ணைப் பாடாது பிற நிலத்துப் பண்ணைப்பாடி வருகின்ற போது அகவர் எனப்படும் உழவர்கள் முல்லை நிலத்தைப் புகழ்ந்து பாடுவதை,

> **"கானவர் மருதம் பாட அகவர்**
> **நீல்நிற முல்லைப் பல் திணை நுவல"[3]**
> **பொருநராற்றுப்படை 220 – 221**

என்று பொருநராற்றுப்படை அடிகள் சுட்டுகின்றன.

**இயவர்**

இயவர் இசைக்கருவிகளை இயக்கும் பாணராவர். இயவு என்றால் கருவி என்று பொருள்படும். இயவர் என்பவரை இன்ன இசைக்கருவிகளை இசைப்பவர் எனக் குறிப்பிடாமல் "வாச்சியக்காரர்" என்று அழைப்பர். இத்தகைய இயவர், தட்டை, தண்ணுமை, குழல் ஆகியவற்றை இசைப்பர். போர்க்களத்துக்குச் செல்லும் முன் முரசிற்கு வழிபாடு செய்யும் தகுதியை இயவர் பெற்றிருந்தனர். பகைவரை வென்று கொண்டு வரும் முரசிற்குக் குருதிப்பலி கொடுத்து, அவற்றை முதலாவதாக இசைக்கும் தகுதி கொண்டவர்கள் இயவர்கள். இதனையே,

> **"மண்ணுறு முரசங் கண் பெயர்த்து இயவர்**
> **கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச"[4]**
> **பதிற்றுப்பத்து (7 – 8)**
> **ஆடுநர் பெயர்த்து வந்தரும் பலிதூஉய்க்**
> **கடிப்புக் கண்ணுறூஉம் தொடித்**
> **தோளியவர்"[5]**
> **பதிற்றுப்பத்து (26 – 28)**

என்ற பதிற்றுப்பத்து அடிகள் உணர்த்துகின்றன.

### கண்ணுளர்

இசையோடு கூத்து நிகழ்த்துபவர் கண்ணுளர் எனப்படுவர். “இவர்கள் சாந்திக் கூத்தாடுபவர்கள் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவார்கள்”[6] கண்ணுளர் மாறுவேடம் பூண்டு ஆடும் கூத்தாடுபவர். தலைவனின் சாந்த குணங்களைப் போற்றிப் பாடுவதும் ஆடுவதும் இவர்களுடைய தொழிலாகும். வள்ளல்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். மன்னனைப் பாடி நடிக்கும் கலைஞரான கண்ணுளருக்கு மா, களிறு, தேர் போன்றவற்றைப் பரிசாக வழங்கினர். இதனையே,

**“விரியுளை மாவும் களிறும் தேரும்**
**வயிரியர் கண்ணுளர்க்கு ஓம்பாது வீசி”[7]**
**பதிற்றுப்பத்து (16 – 17)**

என்ற பதிற்றுப்பத்து பாடலடிகள் சுட்டுகின்றன.

### கலப்பையர்

இசைக் கருவிகளைக் கட்டி வைத்திருக்கும் பையை உடையவர்களை “கலப்பையர்” என்பர்.”[8] கலப்பையர் என்ற சொல் இசைவாணர்களைக் குறிப்பதாகும். புலம் பெயரும் பாணர்கள் இசைக் கருவிகளையும் பிறபொருட்களையும் சுருக்கிக் கட்டிக் காவடிகளில் கொண்டு செல்வர். அவ்வாறு கட்டிச் செல்லும் பையைக் ‘கலப்பை’ என்று கூறுவர். அக்கலப்பையை உடையவரைக் கலப்பையர் என்று அழைப்பர். நாட்டில் வறுமை நிலவினாலும் ஊர்மன்றத்தில் கட்டி வைத்துள்ள தம் இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டு பாடும் இயல்புடையவர்கள். இதனை,

**“வாங்குபு தகைத்த கலப்பையர் ஆங்கண்**
**மன்றம் போந்து மறுகு சிறைபாடும்”[9]**
**பதிற்றுப்பத்து (4 –5)**

என்ற பதிற்றுப்பத்து அடிகளால் அறியலாம்.

### கிணைவன்

கிணை என்றால் கிணைப்பறை. கிணைப்பறையை அடிப்பவனைக் கிணைவன் அல்லது கிணையன் என்று அழைத்தனர்”[10]. வள்ளல்களைப் பாடித் துயில் எழுப்பவும் வீரர்களுக்கு ஊக்கமூட்டவும் கிணைப்பறை பயன்பட்டு வந்துள்ளது. இப்பறையை முழக்குபவரைக் கிணைப்பொருநன், கிணைமகன், கிணைவர் என்று அழைத்தனர். மலைநிலத்தில் யானையை விரட்டக் கிணையர்கள் பறையினை முழக்கியுள்ளனர். இச்செய்தியை,

**“கணையர் கிணையர் கைபுனை கவணர்**
**விளியர் புறக்குடி ஆர்க்கும் நாட”[11]**

என்ற நற்றிணைப் பாடல் வழி அறியலாம்.

### துடியன்

துடி என்னும் பறையை இசைப்பவன் ‘துடியன்’ என்று அழைக்கப்பட்டான்.”[12] போர்த் தொடக்கத்தைத் தெரிவிக்கத் துடியன் துடியை இசைப்பான். தொன்மையான குடிகளில் தோன்றியவன். பாணன், விறலி போன்ற கலைஞர்களுடன் ஒருங்கிணைந்து சென்று வள்ளல்களைக்

கண்டு பரிசில் பெறுபவன். அரசன் மார்பில் துளைத்த வேல், அம்பு போன்ற கருவிகள் துடியன் கையிலிருந்தன என்ற செய்தியின் மூலம், இவர்கள் அரசர்களோடு நெருங்கிய தொடர்பு உடையவர்களாக இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. இதனை,

**"துடியன் கையது வேலே"[12]**

என்ற புறநானூற்று அடி காட்டுகின்றது.

**வயிரியர்**

வயிரியர் பண்ணமைந்த பாடலைப் பாடுவதையும், முழவு இசைப்பதையும் தம் தொழிலாகக் கொண்டனர். வயிர் என்பது வால் போல் நீண்டு வளைந்து இருக்கும் கொம்புக்கருவி, சங்கோடு ஒத்த இசைக்கருவி. இவ் ஊது கருவியினை இசைத்தவர்கள் வயிரியர் எனப்பட்டனர்."[13] இவர்கள் பகைவராலும் நெருங்க முடியாத உயர்ந்த மதில்களை உடைய அரண்மனை முற்றங்களுக்கு, மிக எளிதில் உறவினரைப் போலச் செல்லும் வல்லமை படைத்தவர்கள். இதனை,

**"பாணர் வருக பாட்டியர் வருக**
**யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக"[14]**
**மதுரைகாஞ்சி பாடலடிகள் 749 -750**

என்ற மதுரைக் காஞ்சி பாடலடிகள் உணர்த்துகின்றன.

**சூதர்**

அரசனை வாழ்த்தும் பாணனைச் 'சூதர்' என்பர்.[15] சூதர், அரசனின் முன்னோர்களையும் அவர்களின் குலப்பெருமையினையும் வாழ்த்துவர். மதுரைக் காஞ்சியில் பாண்டியன் நெடுஞ்செழியனுடைய புகழினைச் சூதர் வாழ்த்திக் கூறியதனை,

**"சூதர் வாழ்த்த"[16] மதுரைகாஞ்சி பாடலடிகள் 670**

என்ற பாடலடியால் அறிய முடிகின்றது.

**கோடியர்**

கோடியர் என்பவர் பாணர் மரபினர். இவர்களைக் கூத்தர் என்று குறிப்பிடுவர். கோடு என்பது வயிரில் வேறுபட்ட இசைக்கருவி. இக்கருவியின் இசைக்கு ஆடவல்ல கூத்தர்கள் கோடியர் என்று அழைக்கப்பட்டனர்.[17] கோடியர், பறை என்னும் கருவியினையும், இசை முழவினையும், நரம்பிசைக் கருவிகளையும், கோடியர் இசைப்பதில் வல்லவர்கள். கோடியர் விழாக் காலத்தில் முறையோடு வேடங்களைப் புனைந்து கொண்டு ஆடக் கூடியவர்கள். இதனை,

**"கோடியர் நீர்மை போல முறை முறை**
**ஆடுநர் கழியும்"[18]**

**புறநானூறு அடிகள் 23 - 24**

என்ற புறநானூற்று அடிகள் காட்டுகின்றன.

**பொருநர்**

பொருநர் பாணர்களின் ஒரு வகையினர்.[18] பொருநர் என்பது வீரன், அரசன் முதலானோரைக் குறிக்கும். பொருநர் என்பது பொருத்தமான வேடமிட்டு ஆடிப் பாடுபவரைக் குறிக்கும். இப்பொருநர் போர்க்களத்தோடு தொடர்பு உடையவர்கள். இவர்கள் அரசனின் அவைக்களங்களில் இடைவிடாது பறையை முழக்குவதோடு பேரூரில் நடைபெறும் விழாக்களிலும் பறையை

முழக்கி இடம் விட்டு இடம் பெயர்பவர்கள். இவர்களை,

**"சாறுகழி வழிநாள் சோறு நசை உறாது**
**வேறுபுலம் முன்னிய விரகு அறி பொருந"[19]**
**பொருநராற்றுப்படை அடிகள் (2-3)**

என்று பொருநராற்றுப்படை சுட்டுகின்றது.

### முழவன்

முழவன் என்பவன் பாண்மகன். முழவு என்னும் இசைக் கருவியை இசைப்பவன். விழா நடைபெறும் பழமையான ஊரில் விறலிக்குப் பின் நின்று முழவினை இசைப்பவர். இதனை,

**"விழவு கொள் மூதூர் விறலி பின்றை**
**முழவன் போல அகப்படத் தழீஇ"[20]**
**(அடிகள் 5-6)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் வழி தெரிந்து கொள்ளலாம்.

### விறலி

எண்வகையான மெய்ப் பாடுகளையும் திறம்பட வெளிப்படுத்துபவள் விறலி. விறல்படப் பாடுவதாலும் ஆடுதவதாலும் விறலி எனப்பட்டாள். இவள் பாண் மரபைச் சேர்ந்தவள். ஆடுமகள், கிணைமகள், பாண்மகள், பாடுமகள் என்று அழைக்கப்படுகின்றாள்[21]. இசைக் கருவிகளுடன் இணைந்து பிழையறப் பாடவும் ஆடவும் வல்லவளாய் இருக்கும் விறலி, யாழ் இசைப்பதிலும் வல்லவள் வள்ளல்களைச் சார்ந்து நாடோடி வாழ்க்கை வாழும் பரண்மக்கள் இசைக்கருவிகளை இசைத்துப் பரிசுகளைப் பெற்றனர். இதனை,

**"ஆடுசிறை அறுத்த நரம்பு சேர் இன்குரல்**
**பாடு விறலியர் பல் பிடி பெறுக"[22]**
**பதிற்றுப்பத்து பாடல் அடி 21-22**

என்ற பதிற்றுப்பத்து பாடலடிகளால் அறியலாம்.

### இசைக்கலைஞர் பெறும் சிறப்புக்கள்

பாணர்கள் எளிய வாழ்வு, வாழ்ந்து வந்த போதிலும் தங்களை மதிக்கும் மக்களை மகிழ்விக்கும் செயலைச் செய்து வந்தனர். அதனால் பாணர்கள் வருகையை மக்கள் விரும்பினர். தன்னைப் புகழ்ந்து பாடும் கலைஞர்களுக்குக் கோப் பெருஞ்சோழன் பல பரிசில்களை வழங்கினான். தம்மைப் புகழ்ந்து பாடும் பாடுநர்களின் சுற்றமும் நல்ல வளமுடன் வாழ வேண்டுமென விரும்பி, நிறைவான அணிகலன்களைப் பரிசில்களாக வழங்குவதோடு, வெற்றி பொருந்திய யானைகளையும் பரிசில்களாக வழங்குவான். இச்செய்திகளை,

**"பாடுநர்க்கு ஈத்த பல்புகழன்னே"[23]**

என்று புறநானூறு பதிவு செய்கின்றது.

வள்ளல் பெருமக்கள் பாணனுக்குத் தங்கத்தாலான தாமரைப் பூவினைச் சூட்டி மகிழ்வர். பாணர்களை வண்டு மொய்க்காத தாமரையினைச் சூட்டி அழகுப்படுத்துவர். இதனை,

**"ஆடும்வண்டு இமிராத் தாமரை"[24] அடி - 20**

என்ற புறநானூறு பாடலடிசுட்டுகின்றது.

### முடிவுரை

தலைவன் போர் செய்து வென்ற போர்க்களத்தைப் பாடிய பாணனை அகவலன் என்றும், இசைக்கருவிகளை இசைப்பவர்களை இயவர் என்றும், சாந்துக்கூத்து நிகழ்த்துபவரை

கண்ணுளர் என்றும் இசைக்கருவியைக் கட்டி வைத்திருக்கும் பையை உடையவர்களை கலப்பையர் என்றும் இணைப்பறையை இசைப்பவர் இணைவன் என்றும் துடிப்பறையை இசைப்பவர் துடியன் என்றும் அறியப்படுகிறது. சங்ககால இசைக் கலைஞர்கள் வறுமையில் வாழ்ந்தாலும் அரச பெருமக்களால் பெரும் செல்வம் பெற்று வறுமை நீங்கிச் சிறந்து விளங்கினர். இவர்கள் இசை, ஆடல், பாடல் போன்ற கலைகளைத் திறமையோடு வெளிக்காட்டி அரசன், வள்ளல் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்றுச் சிறப்புற்றிருந்தனர்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் - புறத்திணை நூற்பா எண் 30 பக்கஎண் 20.
2. பதிற்றுப்பத்து, பாடல் எண் 8.
3. பொருநராற்றுப்படை, பாடல் எண் 80.
4. பதிற்றுப்பத்து, பக்க எண் 4.
5. மேலது, பக்க எண் 3.
6. பதிற்றுப்பத்து, பக்க எண் 10.
7. மேலது, பாடல் எண் 23.
8. கலைவாணி, இராச. தொல்காப்பியத்தில் இசை பக்க எண் – 340.
9. பதிற்றுப்பத்து, பக்க எண் 4.
10. கலைவாணி இராச தொல்காப்பியத்தில் இசை பக்க எண் – 342.
11. நற்றிணை பக்க எண் 36.
12. புறநானூறு பக்க எண் 16.
13. கலைவாணி, இராச. தொல்காப்பியத்தில் இசை பக்க எண் – 400.
14. மதுரைக்காஞ்சி பக்க எண் 48.
15. கலைவாணி, இராச. தொல்காப்பியத்தில் இசை பக்க எண் –420.
16. மதுரைக்காஞ்சி பக்க எண் 70.
17. கலைவாணி, இராச. தொல்காப்பியத்தில் இசை பக்க எண் – 80.
18. புறநானூறு, பக்க எண் 18 பொருநராற்றுப்படை, பக்க எண் 8.
19. அகநானூறு, பக்க எண் 20.
20. கலைவாணி, இராச. தொல்காப்பியத்தில் இசை பக்க எண் – 430.
21. பதிற்றுப்பத்து, பக்க எண் 8, 4.
22. புறநானூறு, பக்க எண் 30.
23. மேலது பக்க எண் 42.